


ஒன்றிய அரசைக் கண்டித்து அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டன உரையாற்றினார். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, பழனியம்மாள், அங்கனூர் சிவா, இளங்கோவன், இராம.ஜெயவேல் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் சுமார் 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் தவறான முடிவுகளால் நாடெங்கும் ஏற்பட்டுள்ள கடுமையான சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்தும், அதற்கு உறுதுணை இருக்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க., மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியின் சார்பில் கொத்தாம்பாடி பேருந்து நிலையம் முன்பு ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**16.03.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

**1. UDAN திட்டத்தின்கீழ் செயல்பட்ட விமான நிலையங்களின் செயல்பாடுகளை நிறுத்தியது ஏன்?**

**பி. வில்சன்**




தேசிய குத்தகை திட்டத்தின் (NMP) 2.0-இன் கீழ் நிர்ணயிக்கப் பட்டுள்ள குத்தகைக்கு விட அடையாளம் காணப்பட்டுள்ள விமான நிலையங்கள் மற்றும் அதற்கான காரணங்களையும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தின் ஏரோபிரிட்ஜ் (aerobridge) திறன், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, செய்யப்பட்ட செலவினங்கள், காலக்கெடு மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் ஆகியவை குறித்தும் UDAN திட்டத்தின்கீழ் திறக்கப்பட்டு, குறைந்த தேவை அல்லது நிதிசார் சாத்தியமின்மை காரணமாகத் தங்கள் செயல்பாடுகளை நிறுத்தி வைத்துள்ள விமான நிலையங்கள் குறித்த விவரங்கள், அவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, ஏற்பட்ட மொத்த இழப்புகள் குறித்தும் விவரங்களை வெளியிடுமாறு அவர் கோரியுள்ளார்.

**2. வக்ஃப் இணையதளம்(UMEED) செயலிழப்பு. சரிசெய்வதற்கு கால தாமதம் ஏன்?**

**ஆர். கிரிராஜன் மற்றும் டாக்டர். கனிமொழி சோமு**





வக்ஃப் சொத்துக்களின் மின்னணுப் பதிவிற்கான 'UMEED' இணையதளம், சேவையகச் செயலிழப்புகள் (server crashes), இணையதளத்தில் உள்நுழைவதில் உள்ள சிக்கல்கள், காலக்கெடு நெருக்கடிகள் மற்றும் வக்ஃப் அமைப்பின் தன்னாட்சிக்கு ஏற்படக்கூடிய சட்டரீதியான அச்சுறுத்தல்கள் ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு திமுக மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆர். கிரிராஜன் மற்றும் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்கள். அதில் அவர்கள் வக்ஃப் சொத்துக்களைக் கட்டாயமாகவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்ளும் பதிவு செய்வதற்காக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப் பட்ட 'UMEED' மின்னணு இணையதளத்தை, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் பிற அமைப்புகள் எதிர்த்துள்ளனவா? என்றும் தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்க்கவும், மின்னணுப் பதிவு நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், வக்ஃப் அமைப்பின் தன்னாட்சி உரிமைகளைப் பாதுகாக்கவும் அரசாங்கம் எடுத்துள்ள பயனுள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் கேட்டுள்ளனர்.

**3. உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க ஒன்றிய அரசின் திட்டம் என்ன?**

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



பழைமையான எண்ணெய் வயல்களில், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கும் உலகளாவிய முன்னணி எரிசக்தி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டுஒப்பந்தங்கள் மூலம், தேக்கமடைந்துள்ள உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். அவ்வாறாயின், உரிமம் பெறுவதை எளிதாக்கவும், புதிய ஆய்வுப் பணிகளுக்கான முதலீடுகளை ஈர்க்கவும், 'பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிகள் 2025'-இன் கீழ் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குமுறை கட்டமைப்பின் விவரங்கள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4. ஈரோட்டின் சுற்றுச்சூழல் சீர்கேட்டை சரிசெய்ய நடவடிக்கை என்ன?**

**அந்தியூர் செல்வராசு**



ஈரோட்டில் தொடர்ச்சியாக ஏற்படும் நிலம், நீர், ஒலி மற்றும் காற்று மாசுபாடு உள்ளிட்ட சுற்றுச்சூழல் சீர்கேடுகளை கண்டறிந்து சரிசெய்யவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை பின்பற்றி நகரங்களை மேம்படுத்தவும் ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்கள் மற்றும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராசு கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது மற்றொரு கேள்வியில் அவர், கோடைக்கால நீர் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, 'AMRUT' திட்டங்களின்கீழ், ஈரோட்டில் தடையில்லா குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்றும் நீர் விநியோகம் செய்யும்போது கசிவுகளை குறைக்க முறையான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளனவா என்றும் அவர் கேட்டுள்ளார்.

**5. சிறுபான்மையினர் நலன் நிதி ரூ.7.34 கோடியிலிருந்து ரூ.0.06 கோடியாக குறைக்கப்பட்டது ஏன்? நியாமான காரணங்களை வழங்குமா ஒன்றிய அரசு?**

**ராஜாத்தி சல்மா**



மொத்த ஒன்றிய பட்ஜெட்டில் 2025-26ஆம் ஆண்டில் 0.066 சதவீதமாக இருந்த சிறுபான்மையினர் நலன் அமைச்சகத்தின் பங்கு, 2026-27ஆம் ஆண்டில் 0.064 சதவீதமாகக் குறைந்ததற்கான அடிப்படை நியாயம் என்ன? என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

2025-26 ஆம் ஆண்டில் 7.34 கோடியாக இருந்த சிறுபான்மையினருக்கான உயர்கல்வி உதவித்தொகை 2026-27ஆம் ஆண்டு வெறும் 0.06 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 99 சதவீதம் நிதி குறைக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணங்கள் என்ன? அதோடு மாநிலவாரியாகவும் மற்றும் சமூகவாரியாகவும்

கடந்த ஐந்து ஆண்டுகளில் 'போஸ்ட்-மெட்ரிக்' (Post-Matric) கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் குறித்த விவரங்களை அளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

**6. தமிழ்நாட்டில் விவசாய கடன்களை அனைவருக்கும் எளிதாக்குக!**

**தரணிவேந்தன்**



2014 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட மொத்த கிசான் கடன் அட்டைகளின் (KCCs) எண்ணிக்கை குறித்து திமுக ஆரணி மக்களவை உறுப்பினர் தரணிவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகை விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகள் ஆகியோர் கிசான் கடன் அட்டைகளை எளிதாகப் பெறுவதை உறுதிசெய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? கிசான் கடன் அட்டைகளுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் நிராகரிக்கப்பட்டவை அல்லது நிலுவையில் உள்ளவற்றின் எண்ணிக்கை என்ன? மற்றும் அதற்கான காரணங்கள் என்ன? கிசான் கடன் அட்டைகளின் வரம்பை விரிவுபடுத்தி, மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு போன்ற தொடர்புடைய துறைகளையும் அதில் இணைப்பதற்கான திட்டங்கள் என்ன? கிசான் கடன் அட்டைத் திட்டத்தின் கீழ், கடன் வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்கவும், நியாயமான வட்டி விகிதங்களை உறுதி செய்யவும், சிறு விவசாயிகள் மீது ஏற்படும் கடன் சுமையைத் தடுக்கவும் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் என்னென்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

## அரியலூரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கண்டன உரையாற்றினார்!

அரியலூர், மார்ச் 18 –

தமிழ்நாட்டிற்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை வழங்காமலும், ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் வகையில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைக் குறைப்பதாக ஏமாற்றியும் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, அரியலூரில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ். சிவசங்கர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை உரக்க எழுப்பி பதிவு செய்ததாவது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்ட இந்த எழுச்சிமிகு கண்டன நிகழ்வில், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிரான தங்களது ஒட்டுமொத்தக் குரலை ஒலிக்கச் செய்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் சுயாட்சியைக் காக்கவும் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தொடர்ந்து சமரசமின்றிப் போராடும்.

எத்தகைய அரசியல் தந்திரங்களைச் செய்தாலும், மக்கள் விரோத பாஜகவுக்கு தமிழ்நாட்டில் இனி எக்காலத்திலும் இடமில்லை என்பதை இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் மிகத்தெளிவாக உணர்த்தியுள்ளது.

எடப்பாடி கம்பெனி எப்படி மோடிக்கு அடிமையாக இருக்கிறதோ, அதேபோல பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் ட்ரம்பிற்கு அடிமையாக இருக்கிறார் கேஸ் சிலிண்டர் பிரச்சினை உச்சத்தில் இருக்கின்றபோதும் ஊர் ஊராக சென்று, வாக்கு கேட்கும் நபராக பிரதமர் மோடி இறுக்கின்றார்

எந்த திட்டமாக இருந்தாலும் விளம்பரமும் வெற்று பேச்சுமாக ஒரு அரசாங்கத்தை நடத்திக் கொண்டு வருகிறார்.

மோடி என்ன செய்ய வேண்டும் என இந்தியாவின் பிரதமரிடம் டிரம்ப் சொல்கிறார். ரஷ்யாவிடம் இருந்து இனி பெட்ரோல் டீசல் வாங்க வேண்டாம் என ட்ரம்ப் சொல்கிறார். உடனடியாக மோடி, ஐயா வணக்கம். இனி நான் வாங்கவில்லை என்கிறார். காலம் காலமாக நமக்கு ஆதரவாக இருந்த நாடு ரஷ்யா. நமக்கு எதிராக இருந்த நாடு அமெரிக்கா. ஆனால், இவர் அமெரிக்காவிடம் கூடி குலாவ தற்கான காரணம், எப்ஸ்டின் ஃபைல் எனும் ரகசியத்தில் தான் உள்ளது. ஒரு நாள் அது வெளியே வரப்போகிறது.

ஈரான் பகுதியில் இருந்து வர வேண்டிய கேஸ், குவைத்கத்தார் போன்ற பகுதியில் இருந்து வர வேண்டிய கச்சா எண்ணையும் நமக்கு வரவில்லை

உலக நாடுகள் எந்த மிரட்டல் விடுத்தாலும் அதை எதிர்த்து நிற்கின்ற இரும்பு பெண்மணியாக இந்திரா காந்தி இருந்தார். திராவிட இயக்கத்திற்கும், இந்திராகாந்திக்கும் பல்வேறு கருத்து முரண்பாடு இருந்தாலும், உலக நாடுகளோடு அவர் முரண்பட்டு நின்று இந்தியாவை காத்து நின்றிருக்கும் போதெல்லாம் அதற்கு உறுதுணையாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தற்பொழுது கேஸ் பிரச்சினை உள்ளது. பாஜகவினர் எந்த இடத்திலும் கேஸ் பிரச்சனை இல்லை, தட்டுப்பாடு இல்லை என்கின்றனர். எண்ணெய் நிறுவனங்களே 25 நாட்களுக்கு ஒரு முறை தான் கேஸ் விநியோகம் செய்யப்படும் என அறிவிக்கின்றனர். ஆனால் சென்னையில் 35 நாட்களாகியும் பதிவு செய்தவர்களுக்கு இன்னும் கேஸ் சிலிண்டர் கிடைக்கவில்லை.

கேஸ்சுக்கு மோடி தான் பொறுப்பு. இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் ஹோட்டல் உரிமையாளர்களை அழைத்து இதற்காக நீங்கள் விலையை ஏற்றக்கூடாது என தெரிவித்தவுடன், மின் அடுப்பு பயன்படுத்துவதால் மின்கட்டணம் உயரும் சூழலில், அதற்கு யூனிட்டிற்கு இரண்டு ரூபாய் மானியம் தருகிறேன். மேலும் மின்சார அடுப்பு வாங்குவதற்கும், மானியம் தருகிறேன் என பொதுமக்கள் பாதிக்கக்கூடாது என்பதற்காக அறிவித்திருக்கிறார்.

மின்துறை சார்பாக என்ன செய்ய வேண்டும் என நான் தொகுதியில் இருந்தாலும், நம் முதல்வர் அவர்கள் மக்களுக்கான உத்தரவுகளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்.

மாறாக இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டிய பிரதமர் மோடியோ, திருச்சியில் வந்து நமக்கு புரியாத இந்தி மொழியில் வாக்கு கேட்டுச் சொல்கிறார். மேற்கு வங்கம், அசாம் போன்ற மாநிலங்களில் சென்று வாக்கு கேட்பதுடன், மேற்குவங்கத்திற்கு ரூ.18000 கோடி, அசாமிக்கு 30 ஆயிரம் கோடி என திட்டங்களை அறிவிக்கிறார். ஆனால் தமிழகத்திற்கு எந்த திட்டமும் அறிவிக்கவில்லை பிரதமர் மோடி.

தேர்தல் வரும் போதெல்லாம் வாக்கு கேட்க வந்தாலும், தமிழ்நாட்டின் மீது எந்த அக்கறையும் இல்லை என்பதை காட்டுகின்ற விதத்தில் தான், நமக்கு எந்த திட்டத்தையும் மோடி அறிவிக்கவில்லை.

கேஸ் பிரச்சனை உச்சத்தில் இருக்கின்ற போதும், ஊர் ஊராக சென்று ஓட்டு கேட்பவராகதான் இந்த மோடி இருக்கிறார் என அரியலூர் மாவட்ட செயலாளர் போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

நடைப்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர். பழனியம்மாள், விசிக மாவட்ட செயலாளர் அங்கனூர் சிவா, கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட தலைவர் இளங்கோவன், தேமுதிக மாவட்ட செயலாளர் இராம.ஜெயவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன்,லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, கோ.அறிவழகன், மா. அன்பழகன், அசொகசக்ரவர்த்தி, தெய்வ.இளையராஜா, ஏ.ஜி.எஸ். முருகன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் சுமார் 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (18.03.2026 புதன்கிழமை) காலை 10.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தேர்தல் பணிக்குழுப் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. சட்டமன்றத் தேர்தல் பணி சம்பந்தமாக
2. கழக ஆக்கப் பணிகள்

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர் - விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் வடக்கு ஒன்றியத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் ஒன்றியக் கழக செயலாளர் விஸ்வநாதன், மகளிர் பிரச்சாரக்குழு செயலாளர் உமா மகேஷ்வரி முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், வெள்ளக்கோவிலில் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், ஒன்றியக் கழக செயலாளர் கே.சந்திரசேகரன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.